# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,153 — 1960 ජූලි 1 වැනි සිකුරාදා — 1.7.1960**

12,153 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

**[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 31 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### ஆடுமாடடிப்போர் சட்டம்

ஆடுமாடடிப்போர் சட்டத்தின் (அத்தியாயம் 201) 22 ம் பிரிவின்படி அதற்கான தக்க அதிகாரத்தார், அதாவது, கெக்கிராவை பட்டணச் சங்கம் உண்டாக்க, 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 97,773 ம் இலக்க விசேஷ " கெசெற் " றில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின்படி உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் உறுதிப்படுத்திய பிரமாணங்கள்.

வி. சி. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு, 30.5.1960.

**பிரமாணங்கள்**

1. இப்பிரமாணங்களில்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப்பொருள்படும் ;

" சங்கம் " என்பது கெக்கிராவை பட்டணச் சங்கம் எனப்பொருள்படும் ;

" ஆடுமாடடிக்கும் கொட்டில் " என்பது ஆடுமாடடிப்போர் சட்டத்தின் 21 ம் பிரிவின்படி பிரகடனஞ்செய்யப்பட்ட பொது ஆடுமாடடிக்கும் கொட்டில் எனப் பொருள்படுவதோடு மாடுகளை வெட்டுவதற்கு சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓரிடத்தையும் உட்படுத்தும்.

2. ஆடுமாடடிக்கும் கொட்டில் ஒவ்வொன்றும் சங்கத்தின் பொதுச் சௌக்கியப் பரிசோதகரின் பொறுப்பில் இருத்தல்வேண்டும். சொல்லப்பட்ட பொதுச் சௌக்கியப் பரிசோதகரே அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் ஒழுக்க நெறிக்கும் சுகாதார நிலைமைகளுக்கும் பொறுப்பாளியாக இருத்தல்வேண்டும்.

3. (1) ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலில் எந்த மிருகத்தையும்—

(அ) அதன்பொருட்டு சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரால் அந்த மிருகம் சோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக கொல்லப்படுதற்குத் தகுதியானதென்று அவரால் அங்கீகரிக்கப் பட்டாலன்றி ; அல்லது

(ஆ) காலை 7 மணிக்கும் 9 மணிக்குமிடையேயன்றி, ஒருவரும் கொல்லலாகாது ; ஆயின் தலைவர் எவ்விஷயத்திலும் இதில் சொல்லப்பட்ட நேரமல்லாத எந்த நேரத்திலும் எந்த மிருகத்தையும் கொல்லுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(2) ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலில் எந்த மிருகத்தையும்—

(அ) பந்தி (1)ன் படி அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 72 மணித்தியாலங்கள் கழிந்தபின்னர் எச்சமயத்திலேனும் அல்லது

(ஆ) பந்தி (1) ன்படி அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஆடுமாடடிக்கும் கொட்டில் வளவிலிருந்து அது உயிருடன் அப்புறப்படுத்தப் பட்டிருக்குமாயின், அது மீண்டும் சோதிக்கப்பட்டு அப்பந்தியின் படி மனிதர் உண்பதற்காக கொல்லப்படுதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டாலன்றி, ஒருவரும் கொல்லலாகாது.

4. ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் ஒரு மிருகத்தைக் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அந்த மிருகம் அங்கு நிற்கையில் அதற்குப் போதிய தீனும் தண்ணீரும் கிடைக்கும்படி செய்தற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

5. ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் எந்த மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதென்று நிராகரிக்கப்பட்டால், அவ்விதம் நிராகரிக்கப்பட்ட உடனே, அம்மிருகத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அப்புறப் படுத்துவிக்க வேண்டும்.

6. எந்த மிருகமும் 3 ம் பிரமாணத்தின்படி அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுள்ளதாக அல்லது மனிதர் உண்பதற்காகக் கொல்லப் படுதற்குத் தகுதியற்றதாக காணப்படின், வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் அல்லது 3 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் அம்மிருகம் கொல்லப்படுவதைத் தடைசெய்யலாம்.

7. ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலில் கொல்லப்பட்ட எந்த மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளது அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றது என்று வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் அல்லது 3 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் அபிப்பிராயப்பட்டால் அந்த உத்தியோகத்தர் அந்த இறைச்சி அல்லது கழிவு இறைச்சி விற்பனைக்கு விடப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்கப்படாமல் தடுக்கக்கூடியதாக அதை அழித்துவிடும்படி அல்லது ஒழித்துவிடும்படி செய்தல் வேண்டும்.

8. ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலின் பொறுப்பு உத்தியோகத்தர், மனிதர் உண்பதற்காக கொல்லப்படுதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்படாத அல்லது 6 ம் பிரமாணத்தின் ஏற்பாடுகளின்படி கொல்லுவது தடைசெய்யப்பட்டுள்ள எந்த மிருகத்தையும் கொல்லவிடலாகாது.

9. (1) வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரின் அல்லது 3 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தரின் கட்டளையின் பேரிலன்றி 7 ம் பிரமாணத்தின்படி மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென்று அறிவிக்கப்பட்டிருக்கும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி எதையும் ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து எவரும் அப்புறப் படுத்தலாகாது.

(2) மனிதர் உண்பதற்கான எந்த மிருகத்தினதும் சடலத்தை, அச் சடலத்தின் முன்தொடைகளிலும் பின் தொடைகளிலும் ஆடுமாடடிக்கும் கொட்டிலின் பொறுப்பு உத்தியோகத்தரால் " ப. ச., கெக்கிராவை " என்னும் அடையாளம் இடப்பட்டிருந்தாலன்றி, ஒரு ஆடுமாடடிக்கும் கொடடிலிலிருந்து, எவரும் அப்புறப்படுத்தலாகாது.

10. ஒரு மிருகம் வேறு எந்த மிருகத்தினதும் முன்னிலேயிலாவது அல்லது அவ்விடத்தில் அதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அவ்விடம் சுத்தம்பண்ணப்படும் வரையிலாவது, கொல்லப்படலாகாது.

11. (1) ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலே உபயோகிப்பதற்கு கீழ்க் காணும் வீதப்படியான ஒரு கட்டணம் சங்கத்திற்கு முதலில் கொடுக்கப்பட வேண்டும். அக்கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றான ஒரு உத்தி யோகபூர்வமான பற்றுச்சீட்டு இல்லாமல் எம்மிருகத்தையும் கொல்ல அனுமதிக்கலாகாது :—

செம்மறியாடுகளுக்கும் வெள்ளாடுகளுக்கும், தலைக்கு .. ரூ. 1.0.0

(2) ஒரு மிருகம் 3 ம் பிரமாணத்தின்படி மனிதர் உண்பதற்காக கொல்லுவதற்கு தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டிருக்குமிடத்து, அம் மிருகத்தை ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் விடுவதற்கு முன்னர் கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றான உத்தியோக பூர்வமான பற்றுச்சீட்டு ஒன்றைக் காட்டவேண்டியது அவசியமன்று.

12. ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலின் பொறுப்பு உத்தியோகத்தர் கீழ்க்காணும் மாதிரியில் ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்கு கொண்டு செல்லப்படும் மிருகங்கள் அனைத்தினதும் இடாப்பு ஒன்றை வைத் திருக்கவேண்டும் :—

| மாட்டின் பற்றுச்சீட்டிலக்கம் | வர்ணனை | நிறம் | வயது | குறிசுட்ட அடையாளங்கள் | | ஆடுமாடடிப்பவர் பெயர் | மாட்டுத் தொழுவத்துக்குள் வந்த நேரமும் திகதியும் | சோதித்த திகதி | அப்புறப்படுத்திய திகதி | குறிப்புகள் | ஆடுமாடுகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தரின் முதலெழுத்துக் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வலப்பக்கம் | இடப்பக்கம் | | | | | | |
| | | | | | | | | | | | |

## வவுனியா பட்டணச் சங்கம்

### ஆடுமாடடிப்போர் சட்டம்

ஆடுமாடடிப்போர் சட்டத்தின் (அத்தியாயம் 201) 22 ம் பிரிவின்படி அதற்கான தக்க அதிகாரத்தார், அதாவது வவுனியா பட்டணச் சங்கம் உண்டாக்க, உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர், 1947 ம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ " கெசெற் " றில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உறுதிப்படுத்திய பிரமாணங்கள்.

வீ. சி. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜனவரி மீ 6 ந் வ.

### பிரமாணங்கள்

1. ஆடுமாடடிப்போர் சட்டத்தின் 21 ம் பிரிவின்படி பிரகடனம் செய்யப்பட்ட பகிரங்க ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்கு வவுனியா மிருக வைத்தியர் பொறுப்பாளியாக இருக்கவேண்டும். அந்த உத்தியோ கத்தரே அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் ஒழுக்க நெறிக்கும் சுகாதார நிலைமைகளுக்கும் பொறுப்பாளியாக இருத்தல்வேண்டும்.

2. (1) அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலில் எந்த மிருகத்தையும்—

(அ) அதன்பொருட்டு சங்கத்தால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அந்த மிருகம் சோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காகக் கொல் லப்படுதற்குத் தகுதியானதென்று அவரால் அங்கீகரிக்கப் பட்டாலன்றி ; அல்லது

(ஆ) காலை 7 மணிக்கும் 9 மணிக்குமிடையேயன்றி எவரும் கொல்ல லாகாது : ஆயினும், தலைவர், எவ்விஷயத்திலும், இதில் சொல்லப்பட்ட நேரமல்லாத வேறு எந்த நேரத்திலும் எந்த மிருகத்தையும் கொல்லுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(2) அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலில் எந்த மிருகத்தையும்—

(அ) பந்தி (1) ன்படி அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 30 மணித்தியால நேரம் கழிந்தபின்னர் எச்சமயத்திலேனும் ; அல்லது

(ஆ) பந்தி (1) ன்படி அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து அது உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டிருக்கு மாயின், அது மீண்டும் சோதிக்கப்பட்டு அப்பந்தியின்படி மனிதர் உண்பதற்காக கொல்லப்படுதற்குத் தகுதியானதென்று அங்கீ கரிக்கப்பட்டாலன்றி, எவரும் கொல்லலாகாது.

3. ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் எந்த மிருகத்தையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அந்த மிருகம் அங்கு நிற்கையில் அதற்குப் போதிய தீனும் தண்ணீரும் கிடைக்கச் செய்தற்கு வேண்டிய சகல ஏற்பாடு களையும் செய்யவேண்டும்.

4. ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் எந்த மிருகத்தையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் கொல்லப்படுதற்குத் தகுதியற்ற தென்று நிராகரிக்கப்பட்டால், அது அவ்விதம் நிராகரிக்கப்பட்ட உடனே அம்மிருகத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அப்புறப் படுத்துவிக்கவேண்டும்.

5. எந்த மிருகமும் 2 ம் பிரமாணத்தின்படி அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர், நோயுள்ளதாக அல்லது மனிதர் உண்பதற்காகக் கொல்லப் படுதற்குத் தகுதியற்றதாகக் காணப்படின் அப்பகுதியின் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் அல்லது 2 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் அம்மிருகம் கொல்லப்படுவதைத் தடைசெய்யலாம்.

6. ஆடுமாடடிக்கும் கொட்டிலில் கொல்லப்பட்ட எந்த மிருகத்தி னதும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளது அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றது என்று வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் அல்லது 2 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் அபிப்பிரா யப்பட்டால் அவர் அந்த இறைச்சி அல்லது கழிவு இறைச்சி விற்பனைக்கு வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்கப்படாமல் தடுக்கக்கூடியதாக அதை உடனே அழித்துவிடும்படி அல்லது ஒழித்து விடும்படி செய்தல் வேண்டும்.

7. ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாயுள்ள உத்தி யோகத்தர் மனிதர் உண்பதற்காக கொல்லப்படுதற்குத் தகுதியான தென்று அங்கீகரிக்கப்படாத அல்லது 5 ம் பிரமாணத்தின் ஏற்பாடு களின் கீழ் கொல்வது தடைசெய்யப்பட்டிருக்கும் எந்த மிருகத்தையும் கொல்லவிடலாகாது.

8. (1) அப்பகுதியின் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரின் அல்லது 2 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தரின் கட்டளையின் பேரிலன்றி 6 ம் பிரமாணத்தின்படி மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென்று அறிவிக்கப்பட்டிருக்கும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி எதையும் ஒருவரும் ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து அப்புறப்படுத்தலாகாது.

(2) மனிதர் உண்பதற்கான எந்த மிருகத்தினதும் சடலத்தை, அச் சடலத்தின் முன்தொடைகளிலும் பின் தொடைகளிலும் ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாயுள்ள உத்தியோகத்தரால், காரியத்திற் கேற்ப, " பசவ மாட்டிறைச்சி ", " பசவ ஆட்டிறைச்சி ", " பசவ பன்றி யிறைச்சி " என்னும் அடையாளம் இடப்பட்டிருந்தாலன்றி, ஆடுமா டடிக்கும் கொட்டிலிலிருந்து ஒருவரும் அப்புறப்படுத்தலாகாது.

9. ஒரு மிருகம் வேறு எந்த மிருகத்தினதும் முன்னிலையிலாவது அல்லது அந்த இடத்தில் அதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அந்த இடம் சுத்தம் பண்ணப்படும் வரையிலாவது கொல்லப்படலாகாது.

10. (1) ஆடுமாடடிக்கும் கொட்டிலை உபயோகிப்பதற்கு கீழ்க்காணும் வீதப்படியான ஒரு கட்டணம் சங்கத்திற்கு முதலில் கொடுக்கப்பட வேண்டும். கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றாக ஒரு உத்தியோக பூர்வமான பற்றுச்சீட்டு இல்லாமல் ஒரு மிருகத்தையும் கொல்ல அனுமதிக்கலாகாது :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| மாடுகளுக்கு தலைக்கு .. .. .. | 0 | 75 |
| செம்மறியாடுகளுக்கு, வெள்ளாடுகளுக்கு அல்லது பன்றிகளுக்கு தலைக்கு .. .. .. | 0 | 60 |

(2) ஒரு மிருகம் 2 ம் பிரமாணத்தின்படி மனிதர் உண்பதற்காக கொல்லுதற்கு தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டிருக்குமிடத்து அம் மிருகத்தை ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் விடுவதற்கு முன்னர் கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றாக உத்தியோக பூர்வமான பற்றுச் சீட்டு ஒன்றைக் காட்டவேண்டியது அவசியமன்று.

(3) ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு மிருகம் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டாலேனும் அல்லது கொல்லுவதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஆடுமாடடிப்பவரால் ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து கொண்டுசெல்லப்பட்டாலேனும்—

(அ) அம்மிருகத்தின் பொருட்டு இப்பிரமாணத்தின் (1) ம் பந்தியின் கீழ் செலுத்தப்பட்ட கட்டணத்தை சங்கம் திருப்பிக் கொடுக்க வேண்டும் ; மேலும்

(ஆ) மிருகங்களைக் காட்டுதற்கு நியமித்த இடத்தின் உபயோகத்துக்காக அம்மிருகத்தின்பொருட்டு, இடையறாத இருபத்திநான்கு மணித்தியால காலம் ஒவ்வொன்றுக்கும் 30 சதம் வீதமான கட்டணம் ஒன்றும் செலுத்தப்படவேண்டும் ; கட்டணம் செலுத்தப்படும் வரை அம்மிருகம் அப்புறப்படுத்தப்படலாகாது.

11. ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாக இருப்பவர் கீழ்க்காணும் மாதிரியில் ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்கு கொண்டுசெல்லப் படும் மிருகங்கள் அனைத்தினதும் பதிவேடு ஒன்றை வைத்திருக்க வேண்டும் :

| மாட்டின் பற்றுச்சீட்டிலக்கம் | வர்ணனை | நிறம் | வயது | குறிசுட்ட அடையாளங்கள் | | ஆடுமாடடிப்பவர் பெயர் | மாட்டுத் தொழுவத்துக்குள் வந்த நேரமும் திகதியும் | சோதித்த திகதி | அப்புறப்படுத்திய திகதி | சோதிக்கும் உத்தியோகத்தரின் முதலெழுத் தொப்பம் | பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தரின் முதலெழுத் தொப்பம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வலப்பக்கம் | இடப்பக்கம் | | | | | | | |
| | | | | | | | | | | | | |

12. 1940 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6 ந் திகதி வெளியான 8,659 ம் இலக்க " கெசெற் " றில் பிரசுரமான, சட்டத்தின் 22 ம் பிரிவின்படியான, பிரமாணங்களும் அதில் சொல்லப்பட்ட " விதிகளும் " வவுனியா பட்டணம் சம்பந்தப்பட்ட வரை இத்தால் நீக்கப்படுகின்றன.

13. இப்பிரமாணங்களில்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

" சங்கம் " என்பது வவுனியா பட்டணச் சங்கம் எனப் பொருள்படும்,;

" சட்டம் " என்பது ஆடுமாடடிப்போர் சட்டம் (அத்தியாயம் 201) எனப் பொருள்படும்.

1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் பூறெக்கிரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. 1955 ம ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.

14. சந்தா விகிதங்கள்—

| | ரூ. ச. | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 25 | |
| | 0 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 10 | |
| | 0 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது